**Subscription.**
Inland: Rs. 30/- year
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star,'
182, First Cross Street
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q / J / 104 / News / 89
Established : 1841 : A Christian Weekly: Published Every Friday
Vol. 149 Jaffna, Friday, 01 DECEMBER 1989 No. 48
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in Tamil and English. Please send them to
THE EDITOR,
'The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

## Doctor of Literature.

The Rev. M. A. Ratnarajah of the Methodist Church Sri Lanka presently on the teaching staff of the Tamil Nadu Theological Seminary Arasaradi Madurai has been awarded the Degree of Doctor of Literature. *(D. Litt.)* from the Academy of Research Studies of the Brusels University, Belgium for his research work on The Concept of Grace in Buddhism and Saiva Siddhanta -a comparative study.

## Professor S. P. Appasamy – A Tribute.

The sudden passing away of Prof. Appasamy due to a heart attack in his home at Paul Appasamy Road, Madras in February this year creates a void in the hearts of his many friends, Colleagues and students associated with him at Jaffna College in particular and Jaffna in general. At the time of his death he was Editor of the Guardian in Madras having a few months ago retired as the Editor, English Publications of the C.L.S. Madras. Though in retirement from his academic pursuits as a very erudite professor of English, he was still in demand by a wide range of Students of English researching for their M. Phil and Ph. D degrees.

Shanth as he was affectionately called by his friends and relatives came to Jaffna College by some pleasant act of providence. Mr. K. C. Thurairatnam, later the Junior Vice-Principal of Jaffna College was the pioneer scholar to USA from Jaffna College in 1948. He happened to travel to USA via the Pacific in the steamer the "Marine Adder" where he met two very amiable companions Jacob Chacko the son of Dr. M. O. Chacko of Manipay and Moolai Hospitals and Shanth Appasamy who was proceeding to Harvard University to do his post-graduate studies in English. Mr. Thurairatnam impressed upon Shanth the need for a good English teacher to handle the newly formed degree classes at Jaffna College and on completing his course Shanth arrived at Jaffna College in 1949 or 50, with a brilliant Master's Degree from Harvard and set the pace for a very high standard of English teaching in the College. Last year I was priviledged to listen to a speech by Vimala Edwards (nee Gnanayagam) at the Jaffna College Alumni dinner in Toronto, a brilliant, exquisite speech, studded with gems of English Literature and she pleaded that Jaffna College should continue to emphasize the teaching of English Literature. Vimala was the youngest student to complete her B. A. (Lond) at Jaffna College and was a student of Shanth. There are many others of that calibre who were students of Shanth here, in Madurai and Madras.

During the five years he was at Jaffna College he entered into the life of the College, the Church and community in ways few others have. The 1955 Miscellany of the College refers to him thus: "He could worm his sure way into the hearts of the community-give his best services wherever he found opportunity and need and all matters that called for help. He was Prof. of English, Warden of the Degree Hostel, producer and actor of plays, Advisor to the Young Idea, YMCA and SCM. Associate Editor of the Miscellany, Secretary of the College Co-op stores his contribution was inestimable.

He was an outstanding preacher and narrator of English Literature and a very strong Churchman. His role as Moses in Christopher Fry's "First Born" with Lyman Kulathungam as Pharoah is an unforgettable experience to those of us in the good old days of English Plays.

Quoting the Jaffna College Miscelleny again: " Hospitable though we of the College are generally, it is not always that we give to a stranger the amount of respect, trust and love we gave to Shanth Appasamy. His deep humility, absolute dependability, genuine love, moral integrity, Christian influence and leadership were remarkable, "

That a non — Christian College of the status of Mahajana College, Tellippalai should invite him as the Chief Guest at the Prize - Giving while he was teaching at Jaffna College may indicate to the present generation, the veneration the Jaffna community had for Shanth Appasamy's heritage, culture personality and scholarship.

He was amply endowed with a very pleasing personality — tall fair and handsome, with a beaming smile, a twinkle in his eye and a soft and melodious voice he could capture the hearts of old and young and his students adored him immensely. He was the most loveable of my teachers and colleagues and I never lost an opportunity to look him up at the C.L.S. Madras in my annual visits to Madras during the past 15 years-you could never miss him, for you could see him through the window in that very familiar corner of Madras City adjacent to the Central Railway Station.

On leaving Jaffna College, he served as Literature Secretary of the National Councils of YMCA of India, was Director of the Oberlin-Shanghai Project of the American Board, was professor of English at Madurai, Madras Christian College and the Madras University.

Sarojini his wife, a sister of Prof. Chandran Devanesen, hails from an equally illustrious family in Madras and was a great asset to Shanth. We remember the children specially Satya and Anand who were here in Vaddukoddai and also later Paul and David.

A host of friends in Jaffna and Sri Lanka pay their affectionate homage to a great friend and teacher.

*Rajan Kadirgamar.*

## A Service of Thanksgiving.

for the life and work
of the late

**REVD. M. DEVADASAN**

will be held at the
**C. S. I. Church Erlalai North**
on
**Thursday the 7th of December 1989 at 10.30 A. M.**

**ALL ARE CORDIALLY INVITED.**

*Diocesan Office,*
Vaddukoddai.

*The Rev. A. Jeyakumaran*
*Secretary, J. D. C. S. I.*

## IN GRATEFUL MEMORY

of the

**REV. & MRS.S.R. HITCHCOCK.**

Commemorating the 50th Death Anniversary of the Rev. S. R. Hitchcock on December, 5th. 1989.

The Rev. Sanmugam Ramalingam Hitchcock, a student of the Rev. Dr. Samuel Howland at the Jaffna College Theological Seminary, served as a Minister of the J. C., SIUC, in the Churches of: Usan, Suthumalai, Moolai, Velanai, Chavakachcheri (twice), Atchuvely, Navaly and Udupiddy (twice).

*"MARK THE BLAMELESS MAN, AND BEHOLD THE UPRIGHT; FOR THERE IS POSTERITY FOR THE MAN OF PEACE" — Ps:37 — vs:37.*

Text of the Sermon preached by the Rev. E. K. Yesuthason at the Funeral Service on the 6th December, 1939

(Remembered with much affection, praise and gratitude by a posterity extending to the fifth generation).

## OBITUARY.

The death occurred at the age of 92 of Mrs. Daisy Alice Philips wife of the late Juilius F. Philips of the Judicial Service on Tuesday 7th November 1989 at her residence 13, Charles Way, Colombo 5.

The funeral service was conducted by His Lordshop the Bis-of Colombo at the residence. The committal rites were performed by the Rev. Alfred Chinniah ,Vicar of Holy Emmanuel Church Lockgate.

She leaves behind her only daughter Yogaranee and two sons Nesan and Bubsy, and a host of others to bemoan her loss.

## FAITH AND WORSHIP

**By courtesy S. I. Churchman**

We believe in the transforming power of the liturge in its various forms and in the inheren need to the transcend limits of daily life in celebration.

This confession — timid, perhaps, but nevertheless prophetic—by the WCCs Fifth Assembly (Nairobi, 1975) was remarkably confirmed by the experience of the Vancover Assimbly seven -& a-half years later.

The recovery of 'confidence in worship', of celebrating personal and community faith, is a vital component of a profound spirituality crossing the ecumenical community today.

This is a new kind of liturgical renewal, not so much concerned with appropriating each others' worship material and symbols though that is still an immense and largely unexplored treasure as with the rebirth of the Christian community as the praying church, ecclesia orans, standing before the reality of God's grace and love.

( to be continued )

# உதய தாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

மலர் 149    01 - 12 - 1989    [இதழ் 48


## ★ சிந்தனை 40.

வேதபாகம்: ஓசி. 10.
தியான வாக்கியம் ஓசி. 10:3-12.

இறையியல் அடித்தளத்தில் நின்று அவதானிக்கும் போது உறவு என்ற சொல்லுக்கும் பயம் என்ற சொல்லுக்கும் இணைவு உண்டு என்று கூறுகின்றது விவிலியம். இவ்விணைவு இல்லறவியலுக்கு ஏற்புடையது.

இல்லறவியலில் அடித்தளத்தில் நின்று இறையியல் வெளிப்படுத்தும் உண்மையை உணரும்படி முற்படுகிறேன்.

விநோத், வேலைத்தலத்தில் நின்று வீடு நோக்கி ஓடி வந்தான். வந்தவன் குணு! சபித்தா!! என்று குரல் கொடுத்தான். குரல் கேட்டு, ஓடி வந்து கட்டி முத்தம் தரும் இருவரும் வழமைக்கு மாறாகப் படுக்கையில் அயர்ந்து நித்திரையில் இருந்தார்கள். விநோத்துக்கு ஒரே குழப்பம்.

இன்று குழந்தைகள் இருவரும் நேரத்தோடு ஏன் படுக்கைக்குப் போனார்கள் ஏதாவது சுகவீனமா? என்று.

அப்படி ஒன்றுமில்லை. பிள்ளைகள் விளையாடும் போது தவறுதலாக உங்கள் மேசையின் மேல் இருந்த உங்கள் தாத்தாவின் படம் விழுந்து உடைந்து விட்டது. அப்பாவைத் துக்கப்படுத்தி விட்டோம். அப்பா, தனது மேசைப்பக்கம் போகக் கூடாது என்று கூறிய வார்த்தைக்குப் பணிந்து அடங்காது போய் விட்டோம். அன்பான அப்பா எங்கள் இருவரையும் அடிப்பார் என்று கூறிவிட்டு நேரத்தோடு சாப்பிட்ட இருவரும் படுக்கைக்குப் போய் விட்டார்கள் என்று கூறிமுடித்தாள் மனைவி குமுதா.

அதிருக்கட்டும் நீ பிள்ளைகளைத் தண்டித்தாயா என்று கேட்டான் விநோத். இல்லை, புத்தி சொன்னேன். என்றாள். பிள்ளைகள் இருவரும் அப்பாவைத் துக்கப்படுத்தி

வண. அ. வே. இயேசுதாசன்.

விட்டோம் என்று துக்கப்பட்டுக் கொண்டார்களே அது ஒன்றே போதும் அவர்களுடைய எதிர்கால வாழ்வின் உயர்வுக்கு என்று கூறி முடித்தான் விநோத்.

அப்பாவுக்கும் பிள்ளைகளுக்கும் ஏற்பட்ட உறவுத்தடையை அகற்றும் பணி குமுதாவிடம் தரப்பட்டது. அவள் தன் பணியைப் பண்புடனும் அன்புடனும் செய்து முடித்தாள்.

இல்லறவியலில் ஏற்படும் உறவுத் தாக்கங்கள் எப்போதும் பய உணர்வை ஏற்படுத்தும் இயல்புடையதாக இருப்பது போல இறையியலிலும் நேசபிதாவாகிய இறைவனுக்கும் பிள்ளைகளாகிய மனித இனத்திற்குமிடையிலான உறவில்த் தாக்கங்கள் ஏற்படும் போது பய உணர்வு உண்டாகின்றது.
ஆதாரம், ஆதி. 3 ம் அதிகாரம்.

இறை உறவுக்குப் புறம்பாக வாழ்பவர்கள் பய உணர்வு அற்றே இருப்பார்கள். இவ்வுணர்வைத் துணிச்சல் என்கிறோம். இத்துணிச்சல், கறைபடிந்த உலகையே உருவாக்கும். இறை உறவுக்கும் மனித உறவுக்கும் உட்பட்டு வாழுபவர்களின் பயஉணர்வு நல்ல உலகை உருவாக்கவும், நலமானதைச் செய்யவும் உதவுவதாக இருக்கும். எனவே, இவர்கள் வீரமற்றவர்கள் என்பது பொருளல்ல. இவ்வுண்மையை அப்போஸ்தலர் 16:24-29 வசனங்கள் தொனி செய்து நிற்கின்றன.

ஆகையினால் ஓசியா 10:3 ம் வசனம், நாம் கர்த்தருக்குப் பயப்படாமற் போனபடியினால் என்று கூறுகின்றது.

பரமபிதாவாகிய இறைவனோடு உள்ள உறவை, அன்புக்குரிய அவரது மக்கள் பாதுகாக்கும் அன்புடையவர்களாக இருக்க வேண்டுமென்பது இறைவாக்குரைப்போர் தரும் அறிவு. ஆதாரம், ஏசா.8:13.

சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம் பண்ணுங்கள். அவரே உங்கள் பயமும் அவரே உங்கள் அச்சமுமாக இருப்பாராக. உறவின் நெருக்கம் எப்பொழுதும் இல்லறவியலைச் சிறப்புறச் செய்யும். இறையியலும், இக்கருத்து ஏற்புடையது என்பதைத் தொனி செய்கிறது.
உபாகமம் 5:29

அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் என்றைக்கும் நன்றாயிருக்கும்படி அவர்கள் என் நாளும் எனக்குப் பயந்து என் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும்.

மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவை வளர்த்தெடுப்பதில் இறைவாக்குரைப்போரும் அடியாரும் நாயன்மாரும் அதிகம் பாடுபட்டார்கள்.
இவ்வுண்மையைத் தொனி செய்கிறது ஓசி 10:12 ஆம் வசனம்.

## ● செய்தித்துணுக்கு.

### அணு பரிசோதனைகள்.

1945 ஆம் ஆண்டில் இருந்து உலகில் 1,798 அணு ஆயுதங்கள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

இதில் அமெரிக்கா முதலிடம் வகிக்கிறது. மொத்தம் 932 அணு ஆயுதப்பரிசோதனைகளை அமெரிக்கா நடத்தியுள்ளது.

638 பரிசோதனை நடத்தி இரண்டாவது இடத்தை, சோவியத் யூனியன் பெற்றிருக்கிறது.

மூன்றாவது இடத்தைப் பெற்ற பிரான்ஸ் 172 பரிசோதனைகளையும் நான்காவது இடத்தைப் பெற்ற பிரிட்டன் 41 பரிசோதனைகளையும் நடத்தின.

சீனா 34 பரிசோதனைகளையும் இந்தியா ஒன்றையும் நடத்தியுள்ளது.

அமெரிக்காவில் இன்று 13 ஆயிரத்திற்கு அதிகமான அணுப்போர்க் கருவிகள் உள்ளன. இவை, நீண்டதூர ஏவுகணைகளாகும்.

சோவியத் யூனியனிடம் 11 ஆயிரத்திற்கு அதிகமான அணுப்போர்க் கருவிகள் உள்ளன.

### மின்னணுப்பொறி:

கரப்பான் பூச்சியைக் கொல்லப் புதியவழி ஒன்றை ஆஸ்திரேலிய விவசாயி ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார்.

பிரிஸ்பேன் நகரைச் சேர்ந்த கிரேக் ஜெஃப்ரேஸ் என்பவர் 5 ஆண்டுகாலம் பாடுபட்டு, கரப்பான்பூச்சியைக் கொல்வதற்கு எலிப் பொறிப் பாணியில் மின்னணுப் பொறி ஒன்றை உருவாக்கியுள்ளார்.

இது பார்வைக்கு காலி விடியோ கஸட் போன்று உள்ளது. இதனுடன், மின்சாரப் பிளக்கில் செருகுவதற்கான மின்சார வயர் இணைப்பு உள்ளது.

எலியைப் பிடிக்க மசால வடை வைப்பது போல, இப்பொறியின் உள்ளே கரப்பான்பூச்சிகளைக் கவர்வதற்கு அவற்றுக்குப் பிடித்தமான பொருள்கள் அடங்கிய உணவுவில்லை (Tablet) ஒன்று வைக்கப்படுகிறது'

இப்பொறியில் உணவுவில்லை வைக்கப்பட்டுள்ள சிறிய பகுதியின் தரையும் கூரையும் உலோகத்தாலானது.

கரப்பான் பூச்சி உணவு வில்லையைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, இந்த உலோகப் பகுதியில் 11 மில்லி ஆம்ஸ் அளவில் 2,800 வோல்ட் மின்சாரம் பாய்கிறது.

இந்த மின்சார அதிர்ச்சியானது கரப்பான் பூச்சிகளைக் கொன்றுவிடும். ஆனால் இந்த மின்சார அளவு மனிதருக்கு ஆபத்தை ஏற்படுத்தாது.

உலகில் துரதிஷ்டவசமாக அணுகுண்டுப் போர் நடந்து மனித இனம் அழிந்தாலும் கரப்பான் பூச்சிகள் அழியாது ஜீவித்திருக்கும்.

### தலையணை.

உடல் நலத்திற்கு எத்தனை மணி நேரம் தூங்கவேண்டும்?

இது ஒவ்வொருவருக்கும் வேறுபடுகிறது.

விஞ்ஞானி தோமஸ் எடிசன் தினமும் ஐந்து மணி நேரமே தூங்கினார்.

கலிபோனியாப் பல்கலைக்கழகத்தில் நடத்திய ஓர் ஆராய்ச்சியில் ஒரு மாணவன் தினமும் நான்கு மணிநேரம் (காலை 4-6; மாலை 4-6) மட்டுமே உறங்கியபோதிலும், நல்ல உடல் நலத்துடன் இருந்ததைக் கண்டனர்.

உறக்கம் இல்லாமல் இருப்பது உடல் நலத்திற்குத் தீமை அளிக்கும் என்பதில் கருத்து வேறுபாடில்லை.

படுக்கைக்குப் போகும் முன்னர் மன அமைதியோடும் உணர்ச்சி வசப்படாமலும் இருக்கவேண்டும்.
உறங்குதலை துயில்நிலை, தூக்கம் என்றழைக்கிறோம்.

உறங்குதலைப்பற்றிக் கணக்கிலா இலக்கியங்கள் உள்ளன.

இருப்பினும், இதுவரை சரியான வரையறை (Definition) நமக்குக் கிடைக்கவில்லை.

ஜோன் ஸ்டீன்டெக் என்ற அறிஞர் சொன்னார்: 'கள்ளமற்ற மனமே நிம்மதியான உறக்கத்திற்குத் தலையணை' — என்று.

ஷேக்ஸ்பியர் 'இறத்தல் என்பது தூங்குவது போன்று! ஒருகால், அத்தூக்கத்தில் கனவுகளும் வரலாம்' என்றார்.

வள்ளுவர், 'உறங்குவது போலும் சாக்காடு' — என்றார்.

எனவே நல்ல உறக்கம் உங்களைப் பொறுத்தது.

## ஐந்தாம் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு.

பிரான்சு நாட்டின் ஒரு பாகமாகவும், அதன் இறைமைக்கு உட்பட்டதாகவும் இந்து சமுத்திரத்தில் இருப்பதான றியூனியன் தீவில் 1989 நவம்பர்த் திங்களில் இடம் பெறவிருக்கும் ஐந்தாம் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு சிறப்புற நடைபெற யாழ்-பிரெஞ்சு நட்புறவுக் கழகம் (Alliance Francaise De Jaffna.) தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

பிரான்சு நாட்டின் பிரிக்க முடியாத ஒரு பாகமாக அமைந்துள்ள றியூனியன் தீவில் வதியும் தமிழ் மக்கள், பிரெஞ்சு மொழி பேசும் சமுதாயத்தில், சகல சுதந்திரங்களும் உரிமைகளும் பெற்ற சரிநிகர் சமத்துவ அந்தஸ்து உடையவர்களாக, பிரான்சு நாட்டில் கௌரவத்துடனும், மதிப்புடனும் வாழ்ந்து வருவது அனைவரும் அறிந்த உண்மை.

அத்தகைய கௌரவத்துடன் பீடுற வாழ்ந்து வரும் பிரான்சு நாட்டின் றியூனியன் வாழ் தமிழ் மக்களால், ஐந்தாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மகாநாட்டுக்கான ஆயத்த ஒழுங்குகள், தமிழ்-பிரெஞ்சு எழுத்தாளரும், பிரபல கவிஞருமான உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் துணைத் தலைவர் பாரீஸ் வே.தேவகுமார் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருவதுவரவேற்கவும், பாராட்டவும் பட வேண்டிய விடயமாகும்

றியூனியனில் பிறந்த திரு.வே. தேவகுமார் தலைமையிலான ஆயத்தக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் ஐந்தாம் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு, தமிழ் கூறும் நல்லுலகை இணைப்பது போன்றே, பிரெஞ்சு மொழி பேசும் சமுதாயத்துக்கும், உலகத் தமிழ் மக்களுக்கும் இடையே பண்பாட்டு நல்லுறவை வளர்ப்பதிலும், விருத்தி செய்வதிலும் ஒரு மைல் கல்லாக அமைய வேண்டுமென யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகம் வாழ்த்துகிறது.

அந்த வகையில், ஐந்தாம் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு, சிரிய நற்பலனை அளிப்பதற்கு, சர்வதேச தொலைத் தொடர்பு சாதனங்கள் பொதுப்படையாக உதவி செய்ய வேண்டும். சிறப்பாக, சர்வதேச வானொலிகளது தமிழ் ஒலிபரப்புகளும் மேற்படி றியூனியன் மாநாட்டுக்கு உரிய முக்கியத்துவம் தந்து, சம்பந்தப்பட்ட மாநாட்டுச் செய்திகளை முதன்மைப் படுத்த வேண்டுமென்றும் யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றது.

## போட்டிகளின் முடிவு.

உலக உணவு தினத்தையொட்டி, மருதனாமடத்திலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தினால் "உணவும் சூழலும்" என்ற தலையங்கத்தில் நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றோரின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன:-

கீழ்ப்பிரிவு:-

1 நிரூஜ் குணநாதன் — மானிப்பாய் இந்துக் கல்லூரி.
2 செல்வி கி. கவிதா — வேம்படி மகளிர் கல்லூரி.
3 செல்வி க. செந்திரு — மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி.

மேற்பிரிவு:-

1 செல்வி அனுலா பாலேந்திரன் — வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.
2 செல்வி எஸ். சிந்துமதி — வேம்படி மகளிர் கல்லூரி.
3 செல்வி மகராசி மகாதேவா — சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

பொதுவான போட்டி:

1 செல்வி சி. கனகாம்பிகை — புலோலி.
2 செல்வி ஆ பிரேமதர்ஷினி — இணுவில்.
3 செல்வி இ. லதாறஞ்சனி — சண்டிலிப்பாய்.

வெற்றி பெற்ற இவர்களுக்கான பரிசில்கள், 16-12-89 அன்று நடைபெறவிருக்கும் வட்டு/யாழ். கல்லூரித் தொழில் நுட்ப விவசாய நிறுவன விழாவில் வழங்கப்படும்.

# ★ மாமேதை நேருஜி. ★

## (ஜவஹர்லால் நேருவின் 100 வது பிறந்த ஆண்டு)

"பாழ்பட்டுப் போனதாமோர்
பாரத தேசந்தன்னை
விடுவிக்க வந்தமகாத்மா"

என்ற இலக்கணத் திற்கமைந்த மகாத்மா காந்தியின் வழியில் நின்று, இந்தியாவும் உலகிலே வளர்கிறது-முன்னேற்றம் அடைகிறது என்று அகிலமெல்லாம் நினைக்கவேண்டும் என்று செயற்பட்டு, படிப்படியாய் இந்தியாவை வளர்த்து, இந்தியா தனது இன்றைய நிலைக்கு வளர வித்திட்ட மாமேதை ஜவஹர்லால் நேருவுக்கு இன்று நூற்றுண்டு தினம்.

இந்த நூற்றுண்டு தினம், தனிப்பட்ட ஒரு நேருவுக்கு என்று சொல்வதை விட ஒரு மாமேதைக்கு- மாபெரும் சிந்தனையாளனுக்கு- மாபெரும் அரசியல் நிதானிக்கு- இந்தியாவின் எதிர்கால வளத்துக்கு வித்திட்ட மாபெரும் ஞானிக்கு- எழுத்தாண்ட மாபெரும் சிற்பிக்கு- பஞ்சசிலத்தை வேர்பதித்த மாபெரும் கர்த்தாவுக்கு-மாபெரும் மனித நேயனுக்கு என்று சொல்வதே பொருத்தம்.

இந்தியாவிலே பிரபல்யம்வாய்ந்து விளங்கிய மோதிலால் நேருவின் பரமபரையான ஜனஹர்லால் நேரு, அனைத்து வசதிகளையும் படைத்த குடும்பத்திலே பிறந்தவர் என்பது நாடறியும்.சுயநலவாதியாக- தன்னலப் பிரியனுக அவர் வாழ்ந்திருந்தால்.சுகபோக வாழ்க்கையில்-மேலை நாட்டுப்பாணியில் மூழ்கி மகிழ்ச்சிப் பெருக்கில் சுகித்திருக்கலாம்.

ஆனுல், அவரது உள்ளத்தில் வேரூன்றி வளர்ந்த பிறர் நலம் பேணல்- ஜனநாயகப்பண்பு-பஞ்சசிலக்கொள்கை- தான் பிறந்த நாடு என்ற மனப்பாங்கு- தொண்டாற்ற வேண்டுமென்ற துணிவு ஆகிய அனைத்தும் ஒருங்கு சேர்ந்து, அந்த அறிஞனை ஆசியாவின் வளர்ச்சிக்கு வழிகாட்டத் தூண்டிவிட்டது.

அதனுல்த்தான்,நலிவுற்றுப் பாழ்பட்டிருந்த தனது நாட்டின் வளர்ச்சிக் குரலாக-இருள் நீக்கும் ஒளியாக மட்டுமல்லாமல், ஆசியாக் கண்டத்திலே நலிவுற்றிருந்த ஏனைய நாடுகளின் வளர்ச்சிக்கு ஒலியாகவும், ஒளியாகவும் திகழ்ந்தார். ஆகவே, ஆசியாவின் குரல்- ஆசியாவின் ஒளி என்றெல்லாம் அவர் போற்றப்படுவதில் எதுவித குறையையும் எவரும் கூற முடியாது. அத்தகைய மேதையைக் கௌரவப்படுத்தி நேருஜி என்று அழைக்கிறது உலகம்.

கலங்காத நெஞ்சோடு- கண்ணிய சிந்தையோடு கடமைபுரிந்த மாமேதை ஜவஹர்லால் நேருவின் அன்பைப் பெற்றவர்கள் எத்தனையோ நாட்டினர்...அறிஞர்களும்-அரசியல் ஞானிகளும்- நடிகப் பெருந்தகைகளும்-இசைவல்லுநர்களும்- இலக்கிய கர்த்தாக்களும் மட்டுமன்றி சாதாரண ஏழைஎளிய மக்களும் அவரைத் தங்கள் அன்புக்குப் பாத்திரமாக்கியிருக்கிறூர்கள்.

சுதந்தரப் போராட்டம் என்பது சர்வசாதாரணமானதல்ல. வேதனை-சோதனை-தண்டனை ஆகிய அனைத்துக் கொடுமைகளும் சூழ்ந்து நிற்கும் களம்தான் அது. அவற்றையெல்லாம் பொறுமையோடு தாங்கி-தனது சொத்துகளை இழந்து-பொது மக்களோடு ஒருவராகித் தனது லட்சியத்தை அடைந்த நேருஜியை இன்னும் சில ஆண்டுகள் வாழவிடாது காலன பறித்தது- சாவு இழுத்தது வேதனைக்குரியதே.

"சாவே உனக் கொருநாள்
சாவுவந்து சேராதோ
சஞ்சலமே நீயுமொரு
சஞ்சலத்தைக் காணுயோ"

என்று,நேருஜி இறந்த கட்டத்தில் கவிமேதை கண்ணதாசன் கூறியதை நினைக்கும் போது, மரணத்தின் கொடுமையை வெகுவாகச் சாடத்தான் வேண்டும். அதே வேளையில், நேருஜியைப் போல ஒரு குழந்தையை, இந்த மானிலம் மீண்டும் பெற்றெடுக்க வேண்டும் என்று நாம் விரும்புவதிலும் ஆச்சரியமில்லை.

"பாரே உனக்கொரு சேய்
பார்த்திபனும் நேருஜிபோல்
வாயே வியந்தழைக்க
வரவேண்டும் பிறந்து இனி

நவாலியூர் சி.என்.செல்லத்துரை.

# நோயாளிகளுக்காகச் செபியுங்கள்.

எங்கள் தந்தையாம் கடவுள், தம் மக்களாகிய எம்மிடம் அன்பும் அக்கறையும் கொண்டுள்ளார். தமது பிள்ளைகள் நோயினுல் வாடுவது அவர் சித்தமல்ல அவர் நம்மீது எப்படியான கரிசனையுள்ளார் என்பதைப் பின்வரும் வசனங்களிலிருந்து அறியலாம்.

1) ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல..... (ஏசா. 66:13)

2) தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதைப் போல — (சங். 103:13)

3) பாலூட்டும் தாதி பிள்ளையைக் காப்பாற்றுவது போல — (1 தெச. 2:7)

4) ஒரு மேய்ப்பன் சிதறுண்ட ஆட்டைத் தேடுவது போல — (எசே. 34:12)

5) கோழி தன் குஞ்சுகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்வது போல— (மத். 23:37)

6) கழுகு தன் குஞ்சுகளின் மேல் அசைவாடுவது போல — (உபா. 32:11)

7) மணவாளன் மணவாட்டியின் மேல் மகிழ்ச்சியாய் இருப்பது போல — (ஏசா. 62:5)

**செபங்கள்:**

எல்லாம் வல்ல எங்கள் தந்தையே, உம்முடைய மக்கள் இன்னல் அடையும் பொழுது, நீரும் துயரடைகின்றீர். நீர் மனதுருக்கமும் பரிவும் கொண்டவர். இன்னலடையும் மக்களுக்காக நாங்கள் செபிக்கும் பொழுது, எங்களுக்குச் செவிசாய்த்தருளும் —

உடலிலும் உள்ளத்திலும் தளர்ந்து போயிருக்கிறவர்களுக்கு நல்ல சுகத்தைத் தரவும், சோர்ந்து போயிருக்கிறவர்களும் வேதனையினுல் அவதிப்படுகிறவர்களும் ஆறுதலையும் உதவியையும் பெறவும், மரணத்தறுவாயில் இருக்கிறவர்கள் இருண்ட பள்ளத்தாக்கைக் கடந்து போகும் பொழுது உம்முடைய பிரசன்னத்தை உணரவும், அவர்கள் நித்தியத்தில் எழுந்து உமது திருமுகத்தைக் காணவும் செபிக்கிறோம்.

எந்தவிதத் தவறும் செய்யாமல் வாழ்க்கைப் பயணத்தில் ஊனமடைந்து போனவர்களுக்காகவும், விபத்துக்களினுல் உடல் உறுப்புக்களை இழந்து போனவர்களுக்காகவும் செபிக்கிறோம்.

நிலையற்ற வாழ்வினுல் அவதிப்படுகிறவர்களுக்காகவும், அதிகவேலையினுல் தளர்ச்சியுற்றவர்களுக்காகவும், பசியால் வாடுகிறவர்களுக்காகவும், ஆதரவற்றவர்களுக்காகவும், கீழ் மட்டத்திற்குத் தாழ்த்தப்படுகிறவர்களுக்காகவும், எல்லாவற்றையும் இழந்து நம்பிக்கை இழந்தவர்களுக்காகவும் செபிக்கிறோம்.

சூழ்நிலையின் காரணமாக உம்முடைய அன்பையும் அழகையும் காணமுடியாதிருக்கின்ற சிறுவர்களுக்காகவும், தந்தையையும் தாயையும் இழந்த குழந்தைகளுக்காகவும் செபிக்கிறோம்.

துன்பத்தைக் குறைக்கக் கூடிய உமது அன்பை அறியாதிருக்கிற மக்களுக்காகவும், தாங்கள் செய்த தவறுக்காகத் துன்பப்படுகிற மக்களுக்காவும் செபிக்கிறோம்.

உடல் நோய்களுக்கு மருத்துவம் செய்கிறவர்களும், மக்களின் உடல் நலத்தைப் பேணிக் காக்கிறவர்களும், பரம மருத்துவராகிய நீர் உடலையும் ஆன்மாவையும் நலமடையச் செய்கிறவரென உணர்ந்து உம்முடைய அடிச்சுவட்டிலே நடக்க வேண்டுமெனச் செபிக்கிறோம்.

மருத்துவப் பணிக்காகத் தம்மை நேர்ந்து கொண்டு மருத்துவக் கல்லூரியிலும், மனைகளிலும் பயிற்சி பெறுகிறவர்கள், நோயாளியின்மேல் அன்பும் பரிவும் பாசமும் கொண்டவர்களாய், அந்த நோயாளிகளை, வியாதிகளினுல் பாதிக்கப்பட்ட பொதி மூட்டைகள் என அசட்டை செய்யாது, அவர்களுக்காகவும் கிறிஸ்து மரணமடைந்தார் என உணர்ந்து தூண்டுதல் பெற வேண்டுமென்று செபிக்கிறோம்.

எல்லாம் வல்ல கடவுளே, உம்முடைய திருக்குமாரன் இயேசு, மக்களிடையே காணப்பட்ட நோய்களையம் ஊனங்களையும் குணமாக்கி, நன்மை செய்கிறவராயச் சுற்றித் திரிந்தார். கிறிஸ்துவின் அன்புப் பணி மருத்துவ மனைகளிலும், ஊன முற்றேருடைய இல்லங்களிலும் தொடர்ந்து நலந்தர அருள் புரியும்.

நோயாளிகளுக்கு வேண்டிய நலத்தையும் மன ஊக்கத்தையும் தந்து அவர்களைப் பரிசுத்தப்படுத்தியருளும். மருத்துவர்களும் அறுவைச் சிகிச்சை செய்கிறவர்களும் தாதிகளும் ஞானத்தினுல் நிறைந்து, திறமையோடும் அன்போடும் பொறுமையோடும் பணியாற்ற வேண்டுமென்று மன்றுடுகிறோம். பிணி வராமல் தடுக்கும் பணியிலும் அன்பின் பெரு நோக்கை மக்களிடையே எடுத்துச் செல்லும் பணியிலும் ஈடுபட்டிருப்பவர்களுக்காவும் செபிக்கிறோம்.

## நோவும் — பாடும்.

நோவும் பாடும், நம் ஆன்ம வாழ்க்கையின் தேர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் அவசியமாகும். கசப்பும் சுவையற்றதுமான பல பொருட்கள், நமது உடலுக்கு மிக்க பயனுள்ளவை. இவை, சில நோய்களுக்கு, கைகண்ட மருந்தாகும். சகல நோவும் - பாடும், நமது ஆன்ம வாழ்வு வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடைவதற்கு ஏதுவாயிருக்கிறது. (ரோ.8:18) . இவை, நமது ஆன்ம வாழ்க்கை பலப்படவும் வேரூன்றவும் ஏதுவானவை.

"நாம் அனேக உபத்திரவங்களின் வழியாக,கடவுளுடைய இராஜ்யத்திற்குட் பிரவேசிக்க வேண்டும்." — (அப். நட. 14:22)

—சாது சுந்தர் சிங். —

# திருமண முறிவு உண்டாவதேன்?

-(வண. டாக்டர் ஜேம்ஸ் மேதர்)-

**1. இளம் வயதில் திருமணம் செய்து கொடுப்பது:**

உங்கள் பிள்ளைகளை, தகுந்த வயதை அடையமுன் திருமணம் செய்து கொடுத்தால், அதன் புனிதத் தன்மை பற்றித் தம்பதிகள் அறியாமலிருக்கின்றனர். உடல் வளர்ச்சி அடைவது போல் மனமும் ஆன்மாவும் வளர்ச்சியும், முதிர்ச்சியும் பெற்றிருக்கவேண்டியது,திருமண இணைப்பில் அன்பும் அருளும் தோன்றுவதற்கு இன்றியமையாதவை. 14-18 வயதுக்குள் திருமணம் செய்து கொண்டவர் வாழ்க்கையில் நெருக்கடிகள் ஏற்படுவது இயல்பு. அதே வேளையில் பெண்கள் 25 வயதிற்கும் ஆண்கள் 30 வயதிற்கும் மேற்பட்டவர்களாய்த் திருமணம் செய்து கொள்ளும் போதும் இசைந்து, வாழ்க்கை நடத்துவது கஷ்டமாயிருக்கிறதல்லவா? இதற்குக் காரணம்,இவர்கள் தனிப்பட்ட முறைகளில் மனப்பக்குவம் அடைந்து விட்டிருப்பதால், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ முடியாதிருக்கின்றனர்.

**2. தம்பதிகளுக்கு இடையில் பொதுவான நோக்கங்கள் இல்லாமலிருப்பது:**

இவ்வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக நடைபெற தம்பதிகளுக்கிடையில் கவர்ச்சியிருந்து வந்தால் மட்டும் போதாது. இருவரையும் ஒன்றுக இணைக்கத்தக்க பொதுவான திட்டங்கள், காரியங்கள் வேண்டும். சாதாரணமாக, பிள்ளைகள் தம்பதிகளின் பொதுக் கவனத்தைக் கவர்ந்து தாம்பத்திய வாழ்க்கையில் இணக்கத்தை உண்டாக்கி வருகிறூர்கள். குழந்தைகள் இல்லாதவர்கள் பொதுவான வேறு காரியங்களிற் தம் கவனத்தை ஒருமித்துச் செலுத்துவது நல்லது.

அதாவது, குடும்ப வாழ்க்கைக் குறிக்கோள், வாழும் முறை ஆகியவை பற்றி இசைந்த அனுதாபம் தம்பதிகள் இடையில் இருப்பது நல்லது. சமூகம், திருச்சபை, குடும்பம் ஆகிய எல்லைகளில் கணவனும், மனைவியும் சேர்ந்து நின்று சேவை புரிவது திருமண இணைப்பில் ஆழ்ந்த இன்பத்தைக் காண உதவும்.

**3. தவறுன எதிர் நோக்கு:**

திருமண வாழ்க்கை மங்கல இசையோடும், மணப்பந்தலோடும், விருந்தோடும் துவங்கினுலும், என்றும் இதே அனுபவம் நிலைப்பதில்லை. வாழ்க்கையின் தேவைகளும், பாரங்களும் இளம் தம்பதிகளை விரைவில் சோர்வாக்குகின்றன. இதனுல் அவர்கள் தளர்ந்து,உற்சாகம் குன்றி மனமடிவு கொள்ளப்படாது.

குடும்ப வாழ்வை, அழகிய சோலையாகவோ அல்லது சிறைக்கூடமாகவோ ஆக்குவது தம்பதிகள் கையில் தான் தங்கியுள்ளது. திருமணம், தமது பிரச்சனைகளுக்கு முடிவு எனக் கருதி எவரும் மணம் செய்ய முற்படக்கூடாது. இருவராகச் சேர்ந்து, ஒருவருக்கொருவர் கைகொடுத்து நிறுத்தி ஒருவரை அடுத்தவர் நேசித்து வந்தால், அதுவே நிறைவு காண வழி வகுக்கும்.

**4. சுயநலம்:**

தன்னலமுள்ளவராய் வாழ்கிறவர் குடும்ப வாழ்க்கையில் நிறைவு காண முடியாது தங்களைச் சுற்றியே குடும்பம் சுழலவேண்டும் என்றுல் முடியுமா? கணவன் மனைவியை எவ்வாறு மகிழ்விப்பது, உற்சாக மூட்டுவது என்றும்,மனைவி கணவனுக்கு எப்படி உதவியாக நடந்து கொள்வது என்றும் நினைத்தால் குடும்பத்தில் பொதுவான ஒரு மையம் உண்டாகும். (தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்.

( முற்றொடர் ) புனித பேதுருவின் பெயரில் ரோமாபுரியில் கட்டப்படும் பேராலயத்திற்கு பாவமன்னிப்புச் சீட்டு விற்பனையால் பணம் திரட்டுகின்றோர், உண்மையில் அவ்வாலயத்தை, திருச்சபை மக்களின் தசையையும், எலும்பையும் கொண்டுதான் கட்டுகிறார்கள் என்பதை உணர வேண்டும். அப்பேர்ப்பட்ட ஆலயம் இருப்பதை விட, தீக்கிரையாவதே மேலாகும் திருச்சபையின் உண்மையான செல்வம், கடவுளின் மகிமையையும். அருளையும் கொண்டதாய் விளங்கும் நற்செய்தியே ஆகும். திருச்சபைத் தலைவர்களின் ஒழுக்கக் கேடான வாழ்க்கையை எதிர்ப்போருக்கு, கடவுளின் ஆசீர் வாதம் உண்டு...'

இவ்வகையில், திருச்சபையின் உண்மையான அடித்தளத்தை மக்கள் காணும்படி செய்தமைக்காகக் 'குற்றவாளி' யாகத் தீர்க்கப்பட்டு, மார்ட்டின் லூதர். திருச்சபைத் தலைவர்களுடைய எதிர்ப்புகளுக்கும்· நீதி விசாரணைகளுக்கும் ஆளாகினார். 37 வயது நிறைவு பெற முன்னரே ஜெர்மனியில் மட்டுமல்ல, பிற ஐரோப்பிய நாடுகளிலும் தம்முடைய புகழை – திருமறை அடித்தள உறுதிப்பாட்டு நிலையை, அதை ஒட்டிய இறையியல் தெளிவை, புனித பவுலைப் போன்று நீதிக்காகப் போராடும் அஞ்சாமையை, நற்செய்தியை, முழுமையாக மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை அவர் நிலைநாட்டிக் கொண்டார்.

அவர் காலத்தில் வாழ்ந்த எராமஸ் என்னும் அறிஞர், லூதருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், 'உங்கள் நூல்கள் இங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. இங்கிலாந்தில் வாழும் ஆங்கிலேய அறிஞர் பெருமக்கள், உங்கள் நூல்களை விரும்பிப் படிக்கிறார்கள். உங்களுடைய அஞ்சாமையைப் பலரும் வியந்து போற்றுகிறார்கள்' என எழுதினார்.

இந்த அளவுக்குத் திருமறையின் அடித்தளப் பெருமையையும், திருச்சபைச் சீர்கேடுகளையும் மக்கள் மன்றத்தில் வைத்து, உண்மைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி செய்த லூதர், அக் கால கட்டத்தில் அரிய பல நூல்களையும் எழுதினார். உடல் நலக்குறைவுகள், ஓய்வில்லாத பேராசிரியப்பணிகள், திருச்சபை மேலிடத்தவரின் பயமுறுத்தல்கள், வழக்குத் தொடர்புகள் ஆகியவற்றின் இடையே நூல்கள் எழுத மார்ட்டின் லூதருக்கு நேரம் கிடைத்தது வியப்பாகவே உள்ளது. அவர் காலத்தில் நாளிதழ்கள் இல்லாத காரணத்தால், ஒவ்வொரு நாளும் தம்முடைய எதிர்ப்பாளர்கள் தொடுத்த கேள்விகளுக்குக் கைத்தாள்கள், மூலம் அவர் விடையளிக்க வேண்டியிருந்தது. ஓய்வில்லாமல் இப்படி அவர் எழுதிய தாள்கள், சிறு நூல்கள் ஆகியவற்றில் 400 க்கும் மேற்பட்ட தலைப்புக்களில் அவர் தம் கருத்துக்களை வகைப்படுத்தியுள்ளார்.

இந்த நூல்களின் தொகுப்பு இப்போது 100 தொகுதிகளாக ஜெர்மன் மொழியிலும், வேறு சில ஐரோப்பிய மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. இக் கால கட்டத்தில் எழுதப்பட்ட நூல்களின் மூலமாக ஜெர்மன் நாட்டுப்பணக்கார அரசியல் தலைவர்களும், பகுத்தறிவாளர்களும் இறையியல் சிந்தனையாளர்களும் சில துறவிகளும் அவருக்குத் தங்கள் ஆதரவைத்தர முன வந்தார்கள்.

-(வளரும்)

## பலநாட்டுப் பழமொழிகள்

உழவனுக்கு நிலம் வேண்டும்; பிரபுவுக்கு கௌரவம் வேண்டும்; சிப்பாய்க்குச் சண்டை வேண்டும்: வியாபாரிக்குப் பணம் வேண்டும்: தொழிலாளிக்கு வேலை வேண்டும்; பெண்ணுக்கு முழு உலகமும் வேண்டும்.

(சோவியத் ரஷ்யா)

கிணற்றுக்குள் துப்பாதே; நீயே அதிலிருந்து எப்பொழுது குடிப்பாய் என்பது உனக்குத் தெரியாது.

(செக்கோஸ்லோவேகியா)

தந்தையின் நற்குணம் மலையிலும் உயரமானது: தாயினது நற்குணம் கடலை விடவும் ஆழமானது.

(ஜப்பான்)

நாய்களின் பிரார்த்தனைகள் எல்லாமே ஏற்றுக் கொள்ளப்பட்டால் வானம் எலும்பு மழை பெய்யும்.

(துருக்கி)

ஒவ்வொரு பொய்யும் ஒருபல்லைத் தட்டி விடுமாயின் பலருக்குப் பல்லே இருக்காது.

(கனடன்)

அறியும் சக்தியைப் போன்றதொரு கண் இல்லை. அறியாமையைப் போன்றதொரு குருதி இல்லை நோயைப் போன்றதொரு பகைவனில்லை; மரணத்தைப் போன்றதொரு பயம் இல்லை. (சீனு)

## சிறுவர் பகுதி



### நியூகினியில் உள்ள பழங்குடி மக்கள்.

தென் அமெரிக்காவில் நியூகினி என்னும் ஊரில் உள்ள பழங்குடி மக்கள் நடுவில், மருத்துவப் பணியாற்றிய ஒரு கிறிஸ்தவ மிஷன் மருத்துவரிடம் ஒரு நாள் ஒரு தாயும் தகப்பனும், தங்கள் இரண்டு வயதுப் பெண்பிள்ளையுடன் வந்து. இவளுக்கு ஊசி போட்டு, இவளை ஒரு இளம் பெண்ணாக மாற்றிவிட வேண்டுமெனக் கேட்டனர். ஏனெனில், அவளை உடனடியாகத் திருமணம் செய்து கொடுக்கப் போவதாகக் கூறினர்.

இன்னொரு நாள் வேறொருவர் இந்த மருத்துவரிடம் வந்து, தன் வயிற்றில் ஒரு பறவை இருந்து துன்புறுத்துகிறது. (வயிற்றுவலி) என்று கூறி வயிற்றில் அறுவைச் சிகிச்சை செய்து, பறவையை வெளியேற்ற வேண்டும் என மன்றாடினாராம்.

நியூகினியில் உள்ள பழங்குடி மக்கள் மிகவும் எளியவர்கள். வேட்டையாடிய மிருகங்களின் தோலைப் பட்டணத்தில் விற்றுப் பிழைப்பவர்கள். பட்டணத்தில் உள்ள வியாபாரிகளின் ஏமாற்று வித்தைகளை அறியாதவர்கள். ஆகவே, இந்த வியாபாரிகள், இந்த மக்களிடம் குறைந்த விலை கொடுத்து வாங்கி, இவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான விலையைக் கொடுத்து ஏமாற்றி வந்தார்கள்.

ஆகவே, இந்த நிலையை அறிந்த கிறிஸ்தவ திருப்பணியாளர்கள், முதலாவதாக இம்மக்களின் நலனைப் பேணி உதவ முன்வந்தார்கள். இங்குள்ள பாமரமக்கள் எதிர்பார்ப்பதைப் போல், அதிசய மருந்து வகைகள் தம்மிடம் கிடையாது என்று அவர்களுக்கு விளக்கி, பயத்தால் அவர்கள் தமக்கு வருவித்துக் கொள்ளும் உடல் நோயையும், மனநோயையும் போக்க வல்லவராகிய இயேசு பெருமானைப் பற்றிய நற்செய்தியை அவர்களுக்கு அறிவித்து, அவர்கள் முழு வாழ்வை வாழ உதவி வந்தனர்.

## ★ கருத்துப் பரிமாற்று வைபவம். ★

சுண்ணாகம் கிறிஸ்தவ இறையியற் கல்லூரி மாணவர்கள் ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு செயன்முறைப் பயிற்சி பெறுவதற்காக அருட் திரு அனுகூலனின் மேற்பார்வையின் கீழ் வவுனியாப்பகுதிக்கும், அருட்திரு டானியல் S.தியாகராஜாவின் மேற்பார்வையின் கீழ் மாங்குளம் பகுதிக்கும், அருட்திரு தர்மகுலசிங்கத்தின் மேற்பார்வையின் கீழ் நவாலிப் பகுதிக்கும் அருட்திரு T.தேவநேசனின் மேற்பார்வையின் கீழ் மானிப்பாய், தீவுப்பகுதிகளுக்கும், திருமதி தம்பியப்பாவின் மேற்பார்வையின் கீழ் சத்திய புரம், உடுவில் பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

12.11.1989 காலை 8.30 மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் மேற்படி பயிற்சியில் மாணவர்கள் தாங்கள் பெற்ற அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். இக்கூட்டத்திற்கு அருட்திரு D.R.அம்பலவாணர் தலைமை வகிக்க, அருட்திரு தர்மகுலசிங்கம், அருட்திரு T.தேவநேசன், அருட்திரு சேவக் சாம் அல்பிறட் ஆகியோருடன் இறையியல் கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இக்கருத்துப் பரிமாற்றத்தினால், மாணவர்களின் அனுபவங்களில் இருந்து. திருச்சபைகளை நடாத்தும் ஊழியர்களுக்கு, ஊழியம் செய்வதில் இருக்கும்- ஏற்படும் தடைகள் அப்படியான போதிலும், அவர்கள் செய்யும் நிறைவான பணிகள்; திருச்சபைக்குப் புறம்பான குழுக்களினால் திருச்சபை மக்களிடையே ஏற்படும் குழப்பங்கள்; மக்களுக்கு இருக்கும் பிரச்சனைகள்; அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள், மீண்டும் மீண்டும் உதவியை எதிர்பார்க்கும் மக்கள்; அவர்களை அணுக வேண்டிய முறைகள்; இப்பணிகளினால் மற்றைய மதத்தவரிடையே ஏற்பட்டிருக்கும் அபிப்பிராயங்கள் போன்ற பலவற்றையும் அறியவும் சிந்திக்கவும் கூடியதாக இருந்தது.

செயற்திட்டங்களில் மாத்திரமல்ல, ஆன்மீக வழி நடத்துதலிலும் சபை ஊழியர்களின் பங்களிப்பு, வேதாகமப் படிப்பு, ஆலய ஆராதனைகள், வீட்டு ஜெபக் கூட்டங்கள் போன்றவற்றில் காட்டப்பட வேண்டிய அக்கறை பற்றியும் ஆராயப்பட்டது. செயன் முறைப் பயிற்சி மூலம் பெற்ற அனுபவங்கள் தமது ஊழியத்திற்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என்று மாணவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். செயன் முறைப் பயிற்சிக் காலம் போதவில்லை என்றும் அதற்குரிய காலத்தை விரிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

மாணவர்களின் கருத்துப் பரிமாற்றத்தின் பின்னர் பேசிய அருட்திரு தர்மகுலசிங்கம் தமது உரையில்; ஊழியம் என்றால் என்ன? அதை எவ்வாறு செயற்படுத்த வேண்டும் என்றும் செயன் முறைப்பயிற்சித் திட்டங்கள் மூலம் மக்களின் துன்பங்கள், பிரச்சனைகள் போன்ற விடயங்களை நேரில் உணர்ந்து கொள்ளலாம் என்றும் பல்வேறு நிலையிலுள்ள மக்களை, பலதரப்பட்ட மதத்தவர்களை சந்திப்பதன் மூலம் அவர்கள் எவ்வாறு இறைவனைக் காண்கிறார்கள்? அவர்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு என்ன? என்பதையும் அறிய முடியும் என்றும் கூறினார். மேலும் ஆயர்களின் பணி; தமது தாலந்துகளைப் பயன்படுத்திச் செய்யும் சேவைகள் ஒருவகை என்றும், உதவி புரிவதுடன் மாத்திரம் நின்றுவிடாது மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, அவர்களின் முன்னேற்றத்திலும் சிந்தனையிலும் அவர்களுக்கு ஆர்வமூட்டி, செயற்பட வைக்க வேண்டுமெனவும் மனிதர்களை மனிதர்களாக மதித்து, அவர்களின் உணர்வுகளைப் புரிந்து செயற்படுதல் ஒருவகை எனவும் கூறினார்.

அருட்திரு T.தேவநேசன் உரையாற்றுகையில் எல்லா ஆயர்களும் ஒரே விதமான ஊழியம்தான் செய்கிறார்கள் என்றும், சிலர் அனேக பிரச்சனைகளை எதிர்நோக்குகிறார்கள், சில இடங்களில் உதவி தேவை, சில இடங்களில் உதவி தேவையில்லை என்று நாம் பிரித்துப் பார்க்கக் கூடாது என்றும், கூடாரம் ஒன்றை அமைக்கும் போது கட்டையை ஆழமாக நடவேண்டும்: அத்துடன் கூடாரத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். ஆன்மீகப் பணி, சமூகப்பணியில் செய்யவேண்டிய ஊழியம் என்ன என்பது பற்றியும் கூறினார். புத்தகங்களைப் படிப்பதில் மட்டுமல்லாது செயன்முறைப் பயிற்சியின் மூலமும் அனுபவங்களைப் பெறவேண்டும் என்றார்.

அருட்திரு சாம் அல்பிரட் பேசுகையில் ஊழியம் செய்யும் போது அனேக கஷ்டங்கள், எதிர்ப்புகள் ஏற்படும். அவற்றை, தைரியமாக எதிர் நோக்க வேண்டும் என்றும், கஷ்டங்கள் மத்தியிலும் நாம் கடவுளுக்காகப் பணி செய்கிறோம் என்ற உறுதியும், மகிழ்ச்சியும் ஏற்பட வேண்டும் என்றும் கூறினார்.

அருட்திரு D.R.அம்பலவாணர் முடிவுரை வழங்கும்போது செயன் முறைப்பயிற்சியின் மூலம் மாணவர்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியையும், உற்சாகத்தையும் அவர்களின் கருத்துக்களிலிருந்து அறியமுடிந்தது என்றும் எப்படியான ஊழியத்திற்கு கடவுள் தம்மைத் தெரிந்திருக்கிறார் என்பதை உணர்ந்து எவ்வகையில் பிரச்சனைகளை அணுகவேண்டும் என்ற நல்ல அனுபவத்தை அவர்கள் பெற்றுக் கொண்டிருப்பதையும் காணமுடிந்தது என்றும் ஊழியத்திற்குப் பயின்று கொண்டிருக்கும் மாணவர்களுக்குச் செயன் முறைப் பயிற்சி அவசியம் என்பதால் அடுத்து வரும் ஆண்டுகளில் உரியமுறையில் செயன்முறைப் பயிற்சி அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார். சாம், அண்ணனின் செபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் இந்நிகழ்ச்சி முடிவுற்றது.

### அம்மா பெரிதென்று அக மகிழ்க!

''தம்மின் மெலியாரை நோக்கி,
தமது உடைமை 'அம்மா, பெரிது!'
என்று அகம மகிழ்க; தம்பினும் கற்
றாரை நோக்கிக் கருத்து அழிக, 'கற்
றது எல்லாம் எற்றே இவர்க்கு
நாம்!' என்று''

-நீதி நெறி விளக்கம்.

( திருமண முறிவு... தொடர்ச்சி )

### 5. சமய ஒழுங்கு

கடவுள் மனிதனைத் தமக்காகவே படைத்தார். மனிதன் இதை உணராது, தனக்குத் தானே வாழத் தொடங்கும்போது, அவன் வாழ்க்கையின் நோக்கமும் விசாலமும் குன்றி விடுகிறது. இதை உணர்ந்து கடவுள் வழிபாட்டிற்கும், அவர் வழிகளில் நடப்பதற்கும் குடும்பத்தில் முக்கியத்துவம் அளித்தால், கணவன் மனைவிக்கிடையில் தானாக இணக்கம் உண்டாகும் இறுதிவரை இணை பிரியாது இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்வார்கள்.

தாரகைஒளி:-

வேணவேண திரவியம் எண்ணெய்ஞானி வீட்டில்;
நிர்மூடன் அவையெலாம் செலவிட் டழிப்பான்.

— நீதிமொழிகள் 21: .20 —

# எங்கள் கருத்து

## வருகையின் காலம்.

வருகையின் காலம், கிறிஸ்தவ ஆண்டின் தொடக்கம். ஆங்கிலத்தில் இதனை 'அத்வெந்து' (Advent) என்று கூறுவர். இக்காலம், நவம்பர் 30 ஆம் நாளுக்கு அண்மையில் உள்ள ஞாயிறு தொடங்கி டிசம்பர் 24 ஆம் நாளுடன் முடிவடைகிறது. இக்காலத்திற்குள் வரும் நான்கு ஞாயிற்றுக்கிழமைக்குரிய தியானங்கள் — பழைய ஏற்பாட்டுக் காலத்தில் துன்புற்ற இஸ்ரவேலர், தம்மை மீட்க ஒருவர் வருவார் என்று கொண்ட நம்பிக்கை, இறைவாக்கினர் இந்நம்பிக்கையை உறுதிப்படுத்தியது. திருமறையில், குறிப்பாக, தரிசன இலக்கியத்தில் இந்நம்பிக்கைக்கு ஆதாரமாகத் தரப்பட்ட சான்றுகள். இறுதியில், இறைமைந்தன் தாழ்மையின் உருவாய், 'உலகிலே அவர் தயவு பெற்றவர்க்கு அமைதி நல்க, ஊனியல்பெடுத்து வந்தார் என்பனவற்றைத் தியானித்து, அவரின் முதல் வருகையின் தாற்பரியங்களை உள்ளத்தில் ஆழமாய்ப் பதியவைத்துடன், அவர் வெற்றி வேந்தராகத் திரும்ப வருவார் என்ற நம்பிக்கையில் உறுதியடையவுஞ் செய்கிறது.



அன்று, அமைதி காணத்தவித்தனர் இஸ்ரவேல் மக்கள். இவர் நெடுங்காலமாக அடிமைகளாக வாழ்ந்தனர். துன்பந் துயரம் நிறைந்தவர்களாய் வேதனையுடன் வாழ்ந்தனர். பாபிலோனியச் சிறையிருப்புக்குப் பின், சிறிது காலம் விடுதலை பெற்றிருந்த போதிலும், அவர்கள் பெற்ற விடுதலை நீடிக்க வில்லை. அவர்கள் எதிர்பார்த்த நற்பலன்கள் கிட்டவில்லை. அதற்கு மாருக மீண்டும், பல நெருக்கடிகள், துன்பங்கள், அடக்கி ஒடுக்கப்பட்ட அடிமை வாழ்வு இவைதான் கிடைத்தன. அந்தியோகஸ் எபிபானசு (கி.மு. 175 - 163) யூத சமயத்தையே ஒழித்துக்கட்ட முயன்ருன். எருசலேம் தேவாலயமே இடிக்கப்பட்டது. இதன் பின் மக்காபியர் காலத்தில் 80 ஆண்டுகள் சுதந்திரமாக வாழ்ந்தனர். ஆனல் மீண்டும் எதிரிகளினுலும், உட்பூசல்களினுலும் அமைதி குலைந்தது. யூதர், ரோம சாம்ராஜ்யத்தின் அடிமைகளானுர்கள்.

இத்தகைய நிலையில், யூதர் நம்பிக்கையிழந்தனர். துன்ப இருளினுல் மூடப்பட்டு அந்தகாரத்தில் தள்ளுண்டு ஊக்கமிழந்தவர்களாய் நடைபிணம்போன்ருயினர். அவர்களுக்கு ஊக்கமூட்டும் நோக்குடன், தூய ஆவியரின் தூண்டுதலைப் பெற்று மேசியாவின் வருகைபற்றி இறைவாக்கினர் பறைசாற்றினர். இத்தீர்க்க தரிசனங்கள், 'உலர்ந்த எலும்புகளைப் போன்று உயிரற்ற நிலையில் இருந்தோருக்கு உயிரூட்டி, விசுவாசத்தில் உறுதி பெற்று எழுந்திருக்கச் செய்தது. தரிசன இலக்கியங்களில், மேசியாவின் (மீட்பரின்) வருகை பற்றி விளக்கமான தகவல்கள் தரப்பட்டன. அவர்களை மீட்க வரும் மேசியா, படைப்பலத்துடன் அல்ல, இறைவன் தந்த மனப்பலத்துடன் வருவார். பாவமற்றவராக, பாவிகளின் கட்டுகளை அறுத்தெறிந்து, பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து, மக்களுக்கு விடுதலையளிக்க வருவாரென உரைக்கப்பட்டது. இச்செய்தியை நம்பினேர், இறுதியில் இறைமக்களாக ஆக்கப்பட்டனர்.

நாம், இதுவரை கண்ட யூதரின் வரலாற்றுச் சுருக்கத்தின் மூலம், இறைமைந்தன் இயேசு பெருமான் இவ்வுலகத்திற்கு அனுப்பப்பட்ட நோக்கத்தைக் காண்கிருேம். அன்று வந்தவர், இன்றும் வந்து கொண்டேயிருக்கிருர். இறைவனின் திருவுளச் சித்தத்திற்கு மாருக நடைபெறும் — மனிதாபிமானமற்ற செயல்கள், அடக்கு முறைகள், அட்டூழியங்கள் ஆகியன நடைபெறும் போதும் இயேசு வருகிருர். துன்ப துயரத்தில் தவித்துக் கொண்டிருப் போரையும் ஆற்றித் தேற்ற இயேசு வருகிருர். இன்று, இந்த நம்பிக்கை, தமிழ் மக்களாகிய நமக்கு அதிகமாகத் தேவை. நாம் கஷ்டப்படும் இந்நாட்களில் இறைவன் பேசாதிருக்கின்ருர் என நாம் நினைக்கப்படாது. அவர் கிரியை செய்து கொண்டே இருக்கிருர். காலம் நிறைவேறும் போது, இந்நாட்டு மக்கள் சுதத்திரமாக வாழத்தான் போகிருர்கள். அதுவரை பொறுமையோடு காத்திருப்போம்.

இயேசு பெருமான் இவ்வுலகினுள் வந்தார். இன்றும் வந்துகொண்டே இருக்கிருர். இறுதியில் கர்த்தாதி கர்த்தனுய், அரசர்க்கரசனுய் இவ்வுலகினுள் வருவார். அவர் முதன்முறை வந்த போது இவ்வுலகில் முடிவு காலம் தொடங்கியது. அவர் திரும்ப வரும் போது, இவ்வுலகின் இறுதி முடிவு நிறைவுறும். புதிய உலகம் உருவாகும். இதுவே, வருகையின் காலம் நமக்களிக்கும் செய்தி. 'நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்; உங்களிடம் திரும்பி வருகிறேன்.'' "இதோ, நான் உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்''

— (யோ. 14:18; மத்.28:20).

## போதகர் கடிதம் 5.

தம்பி,

இயேசு பெருமானைப் பற்றி அறிய ஆவலுடைய, கற்றறிந்த இன்றைய சைவர்களுக்கு, எந்த நற்செய்தி நூலை முதலில் கொடுக்கலாமென எழுதியிருந்தாய். உமது கேள்விக்கு.இத்துறையில் அதிகமாக ஈடுபட்டு வரும் பேராசிரியர் போல் சுதாகர் அவர்களின் கருத்தை இங்கு தருகிறேன்.சிந்தித்துப்பார்.

''யோவானின் நற்செய்தி நூல், இறைவனுடன் ஆன்மீக ஐக்கியம் கொள்வதை வற்புறுத்துவதால் அதை இந்துக்கள் விரும்பிப் படிக்கிருர்கள். இந்நூலை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்படும் அருளுரைகளையும் ஆவலுடன் கேட்கிருர்கள். இந்துசமயக் கருத்துக்களைத் தங்கள் அருளுரைகளில் பயன்படுத்த, கிறிஸ்தவ அருளுரையாளர் தயங்குகிருர்கள்.அப்போஸ்தவர் 17 ஆம் அதிகாரத்தில், பவுல் அடியார், கற்றறிந்த இன்றைய இந்துக்களுடன் ஒப்பிடத்தக்க அந்தேனியருக்குப் பிரசங்கிப்பதை நோக்குங்கள். அவர் பழைய ஏற்பாட்டின் படி தன் கருத்துக்களை அமைக்காமல்,கிரேக்க கவிஞர்களின் கருத்துக்களை எடுத்துரைத்தார். அறியப்படாத தேவனுக்கு' என்று அவர்களின் தொழுகை பீடத்தில் வரைந்திருந்த வாசகத்தைக் கொண்டுதான், மெய்யான கடவுளைப்பற்றிய அறிவை பவுல் அவர்களுக்கு உணர்த்தினுர். இதன் மூலம், கிறீஸ்துவின் உயிர்த்தெழுதலையும், நியாயத் தீர்ப்பையும் அவர்களுக்குப் புரியவைத்தார். ''

போல் சுதாகரின் கருத்தைப் பற்றிச் சிந்தியும், இந்த முறையைப் பயன்படுத்தி,நமது சைவ சகோதரருடன் சமய உரையாடல் நடத்தலாமல்லவா? சமய உரையாடல் என்பது, கிறிஸ்தவரல்லாத மக்களை மதமாற்றம் செய்யும் நோக்குடன் செய்யப்படுவதல்ல. சமய உரையாடல் மூலம்,நாம் அவர்களின் சமய நம்பிக்கைகளைத் தெளிவாக அறியவும், நமது நம்பிக்கையை நன்குபுரிந்து கொள்ளவும் முடிகிறது. இதைப் பற்றி விரிவாய், பின்னர் எழுதுகிறேன்.

சமீபத்தில் நான் வாசித்த ஒரு விடயத்தை உம்முடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அதாவது, ஒரு நாள்-ஜேம்ஸ் கே.ஹார்டி என்ற பெரியார், மூடிப் பிரசங்கியாரின் கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது, அவரின் அருளுரையைக் கேட்டு மனந்திரும்பினுர். அவர் மூடிப் பிரசங்கியாரைக் கண்டு 'ஐயா,நான் கிறிஸ்துவுக்காகப் பணியாற்ற ஏவப்பட்டுள்ளேன். நான் என்ன செய்ய வேண்டும்?'' என வினவினுர். அதற்கு, மூடிப் பிரசங்கியார், 'ஸ்கொற்லாந்தின் உழைப்பாளிகள் வறிய நிலையில் உள்ளனர். அவர்களின் வாழ்க்கை நிலை உயர நீர் உதவி செய்ய வேண்டும்? என்று பதிலளித்தார்...

இந்த ஆலோசனையால் தூண்டுதல் பெற்ற திரு. ஹார்டி, பெருமுயற்சி செய்து இங்கிலாந்தின் தொழில் கட்சியைத் துவக்கினுர். அக்கட்சியின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று-அடிமட்டத்தில் வாழும் மக்களின் வாழ்வு நிலையை உயர்த்துவதே. இந்தக் குறிக்கோளை உமது ஊழியத்திலும் பயன்படுத்தும். வறியவர்களுக்கு வாழ்வளிக்கவே நாம் அழைக்கப்பட்டோம்.

அன்பு வாழ்த்துக்கள்!

அண்ணு.

## ★வெட்டி வீழ்த்தடா தீமை அழியட்டும்.

கேளடா மனிதா கேளொரு வார்த்தை
எம்மில் தீமைகள் எத்தனை! எத்தனை!
இத் தீமையை விலக்கி விடு! உனக்கு
ஈசன் மேல் நம்பிக்கை வரட்டும்
பின்பு தீமைக்கு முறிவைத்து விடு! பின்
அத் தீமையை வெற்றி கொள்ள!
தியானத்தில் திரண்டு விடு! பின்
தீங்கை வென்று விடு! மனிதா!
ஐந்தறிவான ஐந்துக்களின் வாழ் வைப்பார்!
ஆறறிவான உன் வாழ்வைப்பார்!
ஐந்துக்களின் வாழ்வில் தீமை யுண்டோ!
மானிடர் வாழ்வில் நன்மை யுண்டோ!
ஏனிந்தக் கொடுமை என்று கேள் மனிதா!
பூமிமேல் தீமையை ஒழித்து விடு!
பிறப்பில் உண்டோ தீமை!
இறப்பில் உண்டோ தீமை!
ஏனிந்தக் கொடுமை! நாம்
ஈசன் பெற்ற பிள்ளைகள் மனிதா
நீ ஈசன் வழியில் வாழ்ந்து விடு
உனக்கு அழிவு வராதபடி காத்து விடு! மனிதா.

# Violence and Non - violence

**— David M. Gill.**

In August 1973 the WCC's Central Committee commended to the member churches a statement entitled "Violence, Non—violence and the Struggle for Social Justice". Well received at the time, it remains the most careful analysis of the subect yet made by a responsible organ of the World Council.

Since then, however, the churches have had six years for further reflection; there have been new developments on the international scene, and several programmes of the WCC have continued to dramatize this cluster of ethical dilemmas in the consciousness of many Christians. It is appropriate, therefore, that the 1973 statement should now be reexamined and its adequacy reassessed. While the impetus for this review comes from the WCC's Programme to Combat Racism, the broader context for it remains what in 1973 was called "the challenge to all Christians to become wiser and more courageous in translating their commitment to Jesus Christ into specific social and political engagement for social justice".

The following considerations suggest themselves for particular attention during the reappraisal.

1. What does the Church, today, have in mind when it speaks about a more just social order and weighs its attitude towards various movements that purport to be struggling for justice? To change a particular social order is not necessarily to improve it, and some agreement about what is being sought after is essential if the churches are to achieve greater consensus about which movements they support and why, and which they don't and why not. The 1973 statement offered one formulation. For our time, it said,

> ...the goal of social change is a society in which all the people participate in the fruits and the decision-making process, in which the centres of power are limited and accountable, in which human rights are truly affirmed for all, and which acts responsibly towards the whole human community of mankind, and towards coming generations

The question, then, is whether this formula can be improved upon, and whether it or something like it should be given some prominence as the churches reflect together on combating racism in the eighties.

## Using the "just war" criteria.

2. Can the traditional, much misused "just war" criteria of Christian ethics be applied to civil conflicts? The 1973 paper unable to give an agreed answer to that question, had to content itself with stating three distinct points of view. For those who do accept violent resistance as a Christian option in extreme circumstances, it suggested, the traditional restraints on the use of force might be restated as follows:

> Not only must the cause be just and all other possibilities exhausted, but also there must be reasonable expectation that violent resistance will attain the ends desired, the must be just and there must be a positive understanding of the order which will be established after the violence succeeds

Part of the debate over the PCR's August 1978 grant to the Patriotic Front of Zimbabwe hinged on whether the recipients' struggle did in fact meet these criteria: could we be reasonably confident it would attain the desired ends, were its methods-just, and how did the cost of that conflict weigh against the prospects for what might follow a Patriotic Front victory? Beyond the merits of that particular grant, however, there are two more basic questions; (a) how adequate is the 1973 formulation (for example, the phrase "a positive understanding" is rather obscure); and (b) should whatever criteria the WCC uses to assess the "justice" or otherwise of particular conflicts be made more explicit? Even more basic, however, is the question of whether the PCR grants should be construed as implying any such assessments at all.

3. How should the World Council understand its relationship to groups aided by the PCR Special Fund? The Central Committee says flatly that "the WCC does not and cannot identify itself completely with any political movement". 2 The PCR grants, it contends, "are intended as an expression of commitment ... to the cause of economic, social and political justice, which these organizations promote". 3 Obviously "commitment to a cause" is one thing and "complete identification with a political movement" is another. While support for a cause cannot be divorced entirely from a degree of responsibility for actions that may be taken in furthering it, the question arises whether the World Council should find ways of making this distinction clearer to all concerned, particularly by stressing that the Church's vision of the Kingdom transcends and relativizes all political movements and by distancing itself from the rhetoric and the tactics employed by organisations it assists. For while Addis Ababa said the WCC could "not pass judgement on those victims of racism who are driven to violence as the only way left to them", the 1973 statement contended that:

> There are some forms of violence in which Christians may not participate and which the Church must condemn... There are violent means of struggle - torture in all forms, the holding of innocent hostages and the deliberate or indiscriminate killing of innocent non-combatants for example-which destroy the soul of the perpetrator as surely as the life and health of the victim.

If the above is still valid, what are its implications for the WCC's Special Fund allocations, conversations with recipient groups and public statements?

## Traps to avoid.

4. Violence should not be equated with radicalism and revolution, nor non-violence with gradualism and reform, nor *vice versa*. Either or both forms of struggle may be used with a wide range of intention, from the revolutionary overthrow of a whole system to relatively minor alterations within a social system.

This emphasis in the '73 document has still not been grasped, either by PCR's critics (many of whom insist on talking about non-violence as if it were a political, non-controversial, ethically unambiguous and safe) or by its supporters (who sometimes talk as if one's enthusiasm for violence were a test of one's commitment to justice). The present debate would be advanced if such oversimplifications could be corrected.

(to be continued)

## Namibia.........

(continued from 24.11.1989 issue)

The words on the grey walls of the cell meant more to him than the catechism classes he went through before his Baptism. He is no longer afraid of death. He does not fear the white man anymore. He does not feel as if he is born again. He feels different stronger, like he felt before Pater Dickmann told him that he was born again... I was born to go through all this, Muronga thinks. All these men here are just like me. We were born to learn through pain how not to fear the white man, how not to fear death.

A second book on the subject conveys the deep sense of outrage felt by a white, South African, Donald Woods, at the hell his country has created for the Black man. An outstanding journalist, he too was forced into exile, but not from prison. He was the editor of the **Daily Dispatch** of East London in the Union of South Africa and had become a close friend of Steve Biko, the Charismatic Black leader who was brutally beaten to death in prison. Woods' biography of his friend and his own autobiography of how he and his family escaped banishment and fled the country in order to publish the Biko biography later formed the basis of the stirring film, "Cry, Freedom."

The book at hand is a collection of his editorials (**South African Dispatches: Letters to My Countrymen**), one more outraged than the other, but particularly so after his friend Biko has been killed. Several of the earlier editorials delight in the tricks he and his wife have played on the Afrikaner police like the time his wife hides two Blacks being chased by the police for not having the proper passes for the Woods Whites-only neighbourhood. Woods cordially invites the policemen to come in to search, even standing furtively in front of a closet he knows to be empty. The discouraged police eventually come to the master bedroom, and Woods points to the bathroom door, lest they should forget to check it out. They are about to enter when his wife's voice cries out in alarm that she's occupying the toilet. The police apologize profusely and leave the home, where upon the two Blacks tumble out of the bathroom with Mrs. Woods laughing at the simple-mindedness of the white police

Two of the editorials touch on the clergy--"Pussyfoots in the Pulpit" and "High Priests of Outrage." The opening paragraph of the first gives an idea of what is to follow:

> Every week hundreds of thousands of white South Africans attend Christian Churches, but the sermons they hear have little to do with Christianity in this country. Most of the clergymen are too scared of real Christianity to spell out its requirements.

The last paragraph concludes:

> Every pulpit in South Africa should have a basin of water and a towel, so that every time a pussyfooting preacher chickens out he can wash his hands in tribute to his real hero-Pontius Pilate.

To this slap in their faces he received many objections from clergymen throughout South Africa. So instead of Pontius-Pilate-like pussyfooters, he suggests:

> How about Ecclesiastical Iscariots? After all, while their sellout isn't for thirty pieces of silver in a bag, it's for thousands of rand notes in the collection plate every Sunday from their comfortable white congregations.

(to be continued)

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/89 News
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press 182,1st,Cross Street, Jaffna on Friday 01 ,December. 1989 and published by The Rev. T. THEVANESAN, 182, First Cross Street, Jaffna